**மார்ச் – 22**

# TNPSC துளிகள்

- "இந்தியாவை உலகிற்கு எடுத்துச் சென்ற துறவி" என்ற பெயர் கொண்ட சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை மற்றும் சிந்தனைகள் ஆகியவை அடங்கிய ஒரு தொகுப்பினை "தி இந்து" நாளிதழ் வெளியிட்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தேனியில் கால்நடை மருத்துவக் கல்லூரி

- தேனி மாவட்டத்தில் ஒரு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி திறக்கப்பட இருக்கின்றது.
- தமிழ்நாடு முதல்வரான எடப்பாடி கே. பழனிசாமி இது குறித்த தகவலை சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.
- மேலும் இவர் நாகர்கோவிலில் உள்ள கால்நடை மருத்துவமனை ஓர் சிறப்பு பன்னோக்கு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

## அம்மா சிறு சந்தைகள்

- தமிழ்நாடு அரசானது மாநிலத்தில் மேலும் 189 அம்மா சிறு கூட்டுறவுச் சந்தைகளைத் திறக்க இருக்கின்றது.
- தமிழ்நாடு முதல்வரான எடப்பாடி கே.பழனிசாமி இது குறித்த தகவலை மாநில சட்டமன்றத்தில் தெரிவித்தார்.
- 300ற்கும் மேற்பட்ட கட்டுப்படுத்தப் படாத பொருட்கள் அதிகபட்ச சில்லறை விலையை விட 50% குறைவாக தற்போது இயங்கி வரும் அம்மா சிறு கூட்டுறவுச் சந்தைகளில் விற்கப்பட்டு வருகின்றன.
- இந்தச் சந்தைகள் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் பொருட்கள் வழங்குவதையும் திறந்தவெளிச் சந்தைகளில் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

# தேசியச் செய்திகள்

## இந்திரா காந்தி மாத்ரிதவ் போஷன் யோஜன்

- இந்தத் திட்டமானது சமீபத்தில் இராஜஸ்தான் மாநில அரசால் அறிவிக்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டமானது இந்த மாநிலத்தில் சோதனை அடிப்படையில் 4 மாவட்டத்தில் செயல்படுத்த இருக்கிறது.
- இந்தத் திட்டமானது மாநிலத்தில் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறிகாட்டிகள் மற்றும் தாய்மார்களிடையே இரத்த சோகை ஆகியவை சராசரியை விட மிக மோசமாக இருக்கும் உதய்ப்பூர், பிரதாப்கார், பன்ஸ்வாரா மற்றும் துங்கர்பூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட இருக்கின்றது.

- இது ஒரு மகப்பேறு உதவித் திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் இரண்டாவது குழந்தைப் பிறப்பிற்காக ரூ.6000 கொடுக்கப்பட இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது முதலாவது குழந்தைப் பிறப்பிற்காக ரூ.5000 வழங்கப்படும் மத்திய அரசின் பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா என்ற திட்டத்துடன் ஒன்றிப் பொருந்துகின்றது.

***PMMVY பற்றி***

- இது கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்காகத் தொடங்கப்பட்ட நிபந்தனையுடன் கூடிய ஒரு நிதியுதவித் திட்டமாகும்.
- இது குழந்தைப் பிறப்பின் போது மற்றும் குழந்தைப் பராமரிப்பின் போது ஏற்படும் ஊதிய இழப்பிற்காக பெண்களுக்குப் பகுதியளவு இழப்பீட்டுத் தொகையை வழங்குகின்றது. மேலும் இது பாதுகாப்பான பிரசவத்திற்கான சூழ்நிலை, சிறந்த ஊட்டச்சத்து மற்றும் சிறந்த பாலூட்டும் நடைமுறைகள் ஆகியவற்றையும் வழங்குகின்றது.

## அடல் பீமா வியாக்தி கல்யாண் யோஜனா

- அடல் பீமா வியாக்தி கல்யாண் யோஜனா என்ற திட்டத்தின் கீழ் அமைப்பு சாராத் தொழிலாளருக்கு வேலைவாய்ப்பற்ற நிதியுதவிப் பலன்கள் அளிக்கப்படும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.
- கொரானா வைரஸ் தொற்று நோயின் தாக்கத்தின் காரணமாக வேலையிழந்த நபர்கள் இந்தப் பிரிவில் உள்ளடங்குவர்.
- இந்த நோய்த் தொற்றின் காரணமாக வேலையிழந்த தொழிலாளர்கள் 3 மாதங்களுக்கு இந்த நிதியுதவியைப் பெற இருக்கின்றனர்.

***இந்தத் திட்டம் பற்றி***

- இந்தத் திட்டமானது இஎஸ்ஐ திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பற்ற காப்பீடு வழங்குகின்றது.
- இ.எஸ்.ஐ. (ESI – Employee State Insurance) என்பது அரசுத் தொழிலாளர் காப்பீட்டுத் திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், தொழிலாளர்கள் கடந்த 2 மாதங்களில் அவர்கள் பெற்ற ஊதியத்தின் 25% நிதியைப் பெறுகின்றனர்.
- இந்தத் திட்டமானது 2018 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது.
- இந்தத் திட்டமானது மூன்று மாதங்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கும் தொழிலாளர்களுக்கு இழப்பீட்டை வழங்குகின்றது.

## இந்தியா – மூன்றாவது மின்சார உற்பத்தியாளர் நாடு

- சர்வதேச ஆற்றல் முகமையின் தரவரிசை குறித்து மத்திய மின்துறை அமைச்சகமானது நாடாளுமன்றத்தில் தெரிவித்தது.
- இந்தத் தரவரிசையின்படி, உலகில் மின்சார உற்பத்தியில் 3வது மிகப்பெரிய நாடாக இந்தியா விளங்குகின்றது.
- மேலும் இந்தியா தலா அல்லது தனிநபர் மின்சார நுகர்வில் 106வது இடத்தில்

தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.


- இந்தியா தற்பொழுது மின்சாரப் பற்றாக்குறையிலிருந்து மின்சார மிகை கொண்ட நாடாக உருவெடுத்துள்ளது.
- எனவே, இந்தியா தற்பொழுது நுகர்வோருக்கு தரமான மின்சாரம் வழங்குவதின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இந்தியாவின் மின்சார உற்பத்தியானது பெரும்பாலும் நிலக்கரியால் மேற்கொள்ளப் படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டு மே மாதத்தின் படி, 72% இந்திய மின்சாரமானது நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின்சார ஆலைகளில் உற்பத்தி செய்யப் படுகின்றது.
- இருப்பினும், பெரும்பாலான ஆற்றல் நிறுவனங்கள் இந்தியா நிலக்கரியைச் சார்ந்திருப்பது குறையும் என்று கணித்துள்ளன.
- இந்தியா தற்பொழுது சூரியஒளி ஆற்றல் போன்ற இதர ஆற்றல் மூலங்களுக்கு மெதுவாக மாறி வருகின்றது.
- 2022 ஆம் ஆண்டிற்குள் இந்தியா 175 ஜிகா வாட் திறனுள்ள ஆற்றலைப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் பெறுவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- இதில், 100 ஜிகா வாட் ஆற்றல் சூரிய ஒளியிலிருந்து பெறப்பட்ட இருக்கின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## பின்லாந்து – உலகின் மகிழ்ச்சிகரமான நாடு

- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பில் உள்ள நாடுகளிடையே மிகக் குறைந்த சமத்துவமின்மை மற்றும் மிகக் குறைந்த வறுமை ஆகியவற்றுடன் மிக உயரிய வாழ்க்கைத் தரம், பாதுகாப்பு மற்றும் பொதுச் சேவைகள் ஆகியவற்றைப் பின்லாந்து நாட்டு மக்கள் அனுபவிக்கின்றனர்.
- ஐக்கிய நாடுகள் அமைப்பைச் சேர்ந்த வல்லுநர்கள் நடப்பு மூன்றாவது ஆண்டிற்காக உலகின் மகிழ்ச்சிகரமான நாடாக பின்லாந்து நாட்டைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.
- உலக மகிழ்ச்சிகர அறிக்கைக்காக ஆராய்ச்சியாளர்கள் 156 நாடுகளில் உள்ள மக்களை, அவர்களின் மகிழ்ச்சிகர நிலையை மதிப்பிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.
- ஒவ்வொரு நாட்டிற்கும் மகிழ்ச்சிகர நிலைக்குரிய மதிப்பெண்ணைத் தருவதற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தி, சமூக உதவி, தனிநபர் சுதந்திரம் மற்றும் ஊழலின் நிலை ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுகின்றன.
- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் பொது அவையின் நீடித்த வளர்ச்சி தீர்வுகள் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- மொத்தமுள்ள 156 நாடுகளிடையே இந்தியா 144வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- OECD என்பது 36 உறுப்பு நாடுகளைக் கொண்ட அரசாங்கங்களுக்கிடையே ஒரு பொருளாதார அமைப்பாகும்.

- இது பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் உலக வர்த்தகம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக 1961ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.




## கரோனாவை கண்டுபிடிப்பதற்கான தொழில்நுட்பம்

- அணுவை அடிப்படையாகக் கொண்ட தொழில் நுட்பப் பயன்பாட்டின் மூலம் புதிய கரோனா வைரஸைக் கண்டறிவதற்கான சோதனைகளை மேற்கொள்ள வளரும் நாடுகளுக்கு உதவ சர்வதேச அணு ஆற்றல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.
- பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் வரும் சில வாரங்களில் வைரஸைக் கண்டறிவதற்கான தொழில்நுட்பம் குறித்த முதலாவது பயிற்சிக்குச் செல்ல இருக்கின்றனர்.
- இந்த பங்கேற்பாளர்கள் நிகழ்நேர தலைகீழ் குறிமுறை பதிப்பு பல்படிம நொதி தொடர்வினை அல்லது RT – PCR (Real-Time Reverse Transcription Polymerase Chain Reaction) சோதனையைக் கையாளக் கற்றுக் கொள்ள இருக்கின்றனர்.
- இந்த நோய் கண்டறிதல் முறையானது குறிப்பிட்ட மணி நேரத்திற்குள்

கரோனா வைரஸை அடையாளம் கண்டு அதைக் கண்டறிவதற்காக அணுவை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது.

- IAEA என்பது அணு சார்ந்த துறையில் ஒத்துழைப்பிற்கான ஒரு சர்வதேச மையமாகும்.
- இந்த அமைப்பானது அணு கலந்த தொழில்நுட்பத்தின் பாதுகாப்பான மற்றும் அமைதியான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக, தனது உறுப்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்றுகின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## டாக்டர் கலைஞர் கருணாநிதி பொற்கிழி விருது

- 2020 ஆம் ஆண்டிற்கான டாக்டர். கலைஞர் கருணாநிதி பொற்கிழி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட இருக்கும் எழுத்தாளர்களின் பட்டியலை தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் சங்கமானது அறிவித்துள்ளது.
- வெற்றி பெற்றவர்கள் பின்வருமாறு :

| வெற்றி பெற்றவர்கள் | துறை |
|---|---|
| N.முருகேச பாண்டியன் | உரைநடை |
| A.மங்கை | நாடகம் |
| அறிவுமதி | கவிதை |
| பொன்னீலன் | நாவல் |
| சித்தலிங்கையா | கன்னட மொழி |
| R.பாலகிருஷ்ணன் | ஆங்கில மொழி |

# முக்கிய தினங்கள்

## சர்வதேச மகிழ்ச்சி தினம் – மார்ச் 20

- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "அனைவரும் ஒன்றிணைந்து மகிழ்ச்சி பெறுதல்" என்பதாகும்.
- முதலாவது சர்வதேச மகிழ்ச்சி தினமானது 2013ஆம் ஆண்டில் மார்ச் 20 அன்று அனுசரிக்கப்பட்டது.


## உலக சிட்டுக் குருவி தினம் – மார்ச் 20

- பறவைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 20ஆம் தேதியானது உலக சிட்டுக் குருவி தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "நான் சிட்டுக்குருவிகளை நேசிக்கின்றேன்" என்பதாகும்.




## சம இரவு – பகல் புவி தினம் – மார்ச் 20

- உலக புவி தினத்தைப் போன்றே புவியைப் பாதுகாப்பதற்காக மனிதர்களால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளை அனுசரிப்பதற்காகவும் சிறந்த காலநிலைக்காக சிறந்த உத்திகளை வகுப்பதற்காகவும் சம இரவு-பகல் புவி தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- ஒவ்வொரு ஆண்டும் சம இரவு-பகல் புவி தினமானது வசந்த கால சம இரவு-பகல் தினத்தன்று (இந்த ஆண்டு மார்ச் 20ஆம் தேதி) அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது வட அரைக் கோளத்தில் வசந்த காலத்தின் முதலாவது தினத்தையும் தென் அரைக் கோளத்தில் இலையுதிர்க் காலத்தின் முதலாவது தினத்தையும் குறிக்கின்றது.
- இத்தின அனுசரிப்பானது முதலாவது சம இரவு-பகல் புவி தினம் மற்றும் முதலாவது புவி தினம் அனுசரிக்கப்பட்ட 1970ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் தேதியிலிருந்து அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- மேலும் இத்தினமானது “இரவும் பகலும் சமமான புவி தினம்” என்றும் அழைக்கப் படுகின்றது.





## உலக வாய் சுகாதார தினம் – மார்ச் 20

- வாய் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக வாய் சுகாதார தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது எஃப்டிஐ உலக பல் கூட்டமைப்பினால் உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகின்றது.
- பதின்ம வயதுடைய நலமுடன் இருப்பவர்கள் 32 பற்களையும் சுழிய (0) பல் துவாரங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

- மேற்கூறியவற்றை எண்ணியல் சார்ந்து குறிப்பிடப்பட்டால் 3/20 எனக் குறிப்பிட வேண்டும். எனவே இதற்காக மார்ச் 20ஆம் தேதியானது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "வாய்ச் சுகாதாரத்திற்கு ஒன்றிணைதல்" என்பதாகும்.

***எப்டிஐ***

- எப்டிஐ என்பது சர்வதேச, உறுப்பினர் அடிப்படையிலான ஒரு அமைப்பாகும். இது உலகம் முழுவதும் உள்ள 1 மில்லியனுக்கும் மேற்பட்ட பல் மருத்துவர்களுக்கான ஒரு முக்கியமான பிரதிநிதித்துவ அமைப்பாக செயல்படுகின்றது.
- இது 1900ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவாவில் அமைந்து உள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★